மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 42/2022 நாள்– 17.04.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.A.C. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– ஞானம்மாள் (வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) வாதியின் ஆதார் அடையாள அட்டை – நகல் – வா.சா.ஆ.1 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அசல் ஆவணம் வாதி வழக்கறிஞரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.)

2) வாதியின் தகப்பனார் சுப்பாநாயக்கர் இறப்பு சான்றிதழ் – நகல் – வா.சா.ஆ.2 (பிராதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது. ஆட்சேபனைக்காரணமாவது நகல் என்பதாகும்)

3) வாதியின் தாயார் லட்சுமியம்மாளின் இறப்பு சான்றிதழ் – நகல் – வா.சா.ஆ.3 (பிராதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது. ஆட்சேபனைக்காரணமாவது நகல் என்பதாகும்)

4) சுப்பாநாயக்கரின் வாரிசு சான்றிதழ் – நகல் – வா.சா.ஆ.4 (பிராதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது.

ஆட்சேபனைக்காரணமாவது நகல் என்பதாகும்)

5) வாதியின் வருமான சான்றிதழ் – அசல் – வா.சா.ஆ.5

6) 14.10.2020 – வில்லங்க சான்றிதழ் – நகல் – வா.சா.ஆ.6 (பிராதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது. ஆட்சேபனைக்காரணமாவது நகல் என்பதாகும்)

7) 12.11.2003 – லட்சுமியம்மாளும் 2ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த பொது பாக பாத்திய விடுதலை ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.7

8) 4.11.2019 – 1ம் பிரதிவாதி தபசில் 5ம் அயிட்ட சொத்தினை 11ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.8

9) 18.11.2020 – 1ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.9

10) வழிகாட்டி மதிப்பு – கணினி நகல் – வா.சா.ஆ.10

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் வழக்கறிஞர்களின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)